**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**-----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

**CC. / STC. / MC./ DVC. No : CC. 171/2021**
**Miscellaneous : -**

**Deposition of PW – 1 Witness for Prosecution**

**Name : திரு. சாரதி**
**Father's Name : திரு. தண்டபாணி**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age : 28**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) (06.07.2023)**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை துவக்க நேரம் 04.40**

1) நான் தற்சமயம் திருக்கோவிலூரிலுள்ள மேலதாளனூரில் வசித்து, கொத்ததனார் வேலை செய்துவருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் எனது நண்பர் ஆவார்.

2) கடந்த 21.06.2021 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் நானும், எனது நண்பர் பிரகாசும் மேட்டுருக்கு வேலைக்கு செல்ல பிரகாஷுக்கு சொந்தமான இருசக்கர வானத்தில் பிரகாஷ் ஓட்ட பின்னால் நான் உட்கார்ந்து போய்க்கொண்டிருந்தோம்.

3) இரவு சுமார் 10.30 – 11.00 மணி இருக்கும் தென்னங்குடிபாளையம் ரமாஸ்ஹோட்டலுக்கு எதிரே சென்றுகொண்டிருந்தபொழுது எங்களுக்கு எதிரே வந்த கார் மோதிவிட்டது. அதில் தூக்கி வீசப்பட்டதில் நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு கையிலும், வலது கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. பிரகாஷ்க்கும் இடதுபக்க கழுத்து, இடுப்பு, இரண்டு கணுக்கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

4) அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர GH க்கு சேர்த்தார்கள். மருத்துவமனையில் சேர்த்த கொஞ்சநேரத்தில் பிரகாஷ் இறந்தவிட்டதாக கேள்விப்பட்டேன். என்னை மேல் சிகிச்சைக்காக சேலம் GH க்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு **TN** 16 **Y**0846 ஆகும். அதன் ஓட்டுநர் திருவண்ணாமலையை சேர்ந்த மஞ்சுநாதன் என்று சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) பிரகாஷ்ம் நானும் எத்தனை வருடங்களாக நண்பர்கள் என்றால் சிறிய வயது முதல் நண்பர்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ வரை படித்துள்ளேன். பிரகாஷ் படிக்கவில்லை 9 ம் வகுப்பு வரைதான் படித்துள்ளார்.

2) எங்கள் இருவருக்கும் மேலதாளனூர்தான் சொந்த ஊர் என்றால் ஆமாம். விபத்து என்று நடந்தது என்றால் 21.06.2021. நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும் **TN** 15 **D** 5695 ஆகும்.

3) நாங்கள் மேலதாளனூரில் இருந்து தியாகதுர்கம் வழியாகத்தான் சேலம் வரவேண்டும் என்றால் சரிதான். விபத்தில் இறந்த பிரகாஷ்க்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை.

4) விபத்து நடந்த இடம் இருவழிச்சாலை என்றால் சரிதான். இருசக்கர வானத்தை ஓட்டி வந்த எனது நண்பர்தான் அவரது பாதையில் இருந்து விலகி வந்து, எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**முடிவு நேரம் 05.05**

**Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct**

**Sd/-S. Munusamy. B.Sc., B.L.,**
**Judicial Magistrate No.1,**
**Attur.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**-----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| **CC. / STC. / MC./ DVC. No** | **:** | **CC. 171/2021** |
| **Miscellaneous** | **:** | **-** |

**Deposition of PW – 2 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | **திரு. முருகன்** |
| **Father's Name** | **:** | **திரு. சுப்ரமணி** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | **51** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) (06.07.2023)**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**
**துவக்க நேரம்** 05.06

1) நான் தற்பொழுது திருக்கோவிலூரில் உள்ள மேலதாளனூரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் எனது மகன் ஆவார்.

2) எனது மகன் கம்பி கட்டும் வேலை செய்துவந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது மகன் சேலத்திற்கு சாரதியுடன் வேலைக்கு சென்றார். அன்று நள்ளிரவு 01.00 மணியளவில் 108 ஆம்புலன்சில் இருந்து போன் செய்து, சாரதியும், பிரகாஷ்ம் சென்ற வாகனத்தின் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்.

3) நான் ஆத்தூர் Gh க்கு சென்று பார்த்தேன். எனது மகனுக்கு கழுத்து, இடுப்பு, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டு, இறந்திருந்தார். சாரதியை மேல் சிகிச்சைக்காக சேலம் Gh க்கு சென்றிருப்பதாக கேள்விப்பட்டேன்.

4) ஆத்தூர் Gh ல் எனது மகனின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

முடிவு நேரம் 05.15

**Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct**

**Sd/-S. Munusamy. B.Sc., B.L.,**
**Judicial Magistrate No.1,**
**Attur.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**-----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| **CC. / STC. / MC./ DVC. No** | **:** | **CC. 171/2021** |
| **Miscellaneous** | **:** | **-** |

**Deposition of** **PW – 3 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | **திரு. சகுந்தலா** |
| **Father's Name** | **:** | **திரு. முருகன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | **46** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) (06.07.2023)**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**
**துவக்க நேரம்** 05.16

1) நான் தற்பொழுது திருக்கோவிலூரில் உள்ள மேலதாளனூரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் எனது மகன் ஆவார்.

2) எனது மகன் கம்பி கட்டும் வேலை செய்துவந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் சுமார் இரவு 07.30 மணியளவில் எனது மகன் சேலத்திற்கு சாரதியுடன் வேலைக்கு சென்றார். அன்று இரவு 11.00 மணியளவில், ஆத்தூர் Gh ல் இருந்து சாரதி மருத்துவர் மூலமாக போன் செய்து சாரதியும், பிரகாஷ்ம் சென்ற வாகனத்தின் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தில் பிரகாஷ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்.

3) நான் ஆத்தூர் GH க்கு சென்று பார்த்தேன். எனது மகனுக்கு கழுத்து, இடுப்பு, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டு, இறந்திருந்தார். சாரதியை மேல் சிகிச்சைக்காக சேலம் Gh க்கு சென்றிருப்பதாக கேள்விப்பட்டேன்.

4) ஆத்தூர் GH ல் எனது மகனின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

முடிவு நேரம் 05.21

**Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct**

**Sd/-S. Munusamy. B.Sc., B.L.,**
**Judicial Magistrate No.1,**
**Attur.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**-----**
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.</u>**

**CC. / STC. / MC./ DVC. No : CC. 171/2021**
**Miscellaneous : -**

**Deposition of PW – 4 Witness for Prosecution**

**Name : திரு. பிரபு**
**Father's Name : திரு. முருகன்**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age : 34**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) (06.07.2023)**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**
**துவக்க நேரம்** 05.23

1) நான் தற்பொழுது திருக்கோவிலூரில் உள்ள மேலதாளனூரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் எனது தம்பி ஆவார்.

2) எனது தம்பி கம்பி கட்டும் வேலை செய்துவந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் சுமார் இரவு 07.30 மணியளவில் எனது மகன் சேலத்திற்கு சாரதியுடன் வேலைக்கு சென்றார். அன்று இரவு 12.00 மணியளவில், நான் தூங்கிக்கொண்டிருந்தபொழுது எனது அப்பா எனது தம்பிக்கு தென்னங்குடிபாளையம் பைபாஸ் ரோட்டில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் வந்தது என்று என்னிடம் சொன்னார். நானும், எனது உறவினர்களுடன் ஆத்தூர் GH ல் வந்து பார்த்தேன்.

3) எனது தம்பிக்கு கழுத்து, இடுப்பு, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டு, இறந்திருந்தார். சாரதியை மேல் சிகிச்சைக்காக சேலம் GH க்கு சென்றிருப்பதாக கேள்விப்பட்டேன். இந்த விபத்து கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். கார் ஓட்டுநர் திருவண்ணாமலையை சேர்ந்த மஞ்சுநாதன் என்று சொன்னார்கள்.

4) ஆத்தூர் GH ல் எனது தம்பியின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**

முடிவு நேரம் 05.28

**Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct**

**Sd/-S. Munusamy. B.Sc., B.L.,**
**Judicial Magistrate No.1,**
**Attur.**